©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 14] CHENNAI, WEDNESDAY, APRIL 9, 2014
Panguni 26, Vijaya, Thiruvalluvar Aandu – 2045

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

**NOTIFICATIONS BY GOVERNMENT**

**CONTENTS**


| | Pages. |
|---|---|
| **தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை** | |
| Labour Courts for Adjudication .. .. .. | 378-379 |
| Industrial Tribunal for Adjudication .. .. .. | 379-380 |
| PUBLIC (S.C.) DEPARTMENT | |
| Official Secrets Act.— | |
| Declaration of the premises of M/s. Indian Oil Corporation Limited Repeater-*cum*-Cathodic Protection Station located at Vengal, Athangikavanur and Punnapakkam Village, Uthukottai Taluk, Tiruvallur District .. .. | 381 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.

**Industrial Disputes between workmen and Managements referred to Labour Courts for Adjudication.**

**அம்பாஸிடர் பல்லவா, சென்னை**

*[அரசாணை (டி) எண் 91, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ—1)த் துறை, 24 பிப்ரவரி 2014, மாசி 12, விஜய, திருவள்ளுவர் ஆண்டு—2045.]*

No. II(2)/LE/299/2014.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, அம்பாஸிடர் பல்லவா, சென்னை என்ற நிர்வாகத்திற்கும், அம்பாஸிடர் பல்லவா தொழிலாளர் சங்கம் என்ற தொழிற் சங்கத்துக்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1) (c) பிரிவிலும், 10(1) (d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

**கோரிக்கை-1**

தொழிலாளர்களுக்கு கிரேடு வாரியாக அடிப்படை சம்பளம் நிர்ணயம் செய்யக் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்திரவு பிறப்பிக்க.

| | |
|---|---|
| Grade-1 | 1000—250—1500—500—2000—750—2500 |
| Grade-2 | 1200—400—2200—800—3200—1200—4200 |
| Grade-3 | 1300—500—2300—1000—3300—1500—4300 |
| Grade-4 | 2400—750—3400—1500—4400—2000—5400 |
| Grade-5 | 2500—1000—3500—2000—4500—3000—5500 |
| Grade-6 | 2750—1500—3750—2500—4750—3500—5750 |
| Grade-7 | 4000—2000—5000—3000—6000—4000—7000 |

**கோரிக்கை-2**

தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கிவரும் கூடுதல் அடிப்படை சம்பளம் என்ற தொகையினை அடிப்படை சம்பளத்துடன் இணைக்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-3**

தொழிலாளர்களுக்கு 1936—ம் ஆண்டு புள்ளியின் அடிப்படையில் புள்ளி ஒன்றுக்கு ரூ.1 அகவிலைப்படியாக வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-4**

தொழிலாளர்களுக்கு மொத்த ஊதியத்தில் 30 சதவிகிதம் வருடாந்திர ஊதிய உயர்வாக வழங்கவும், அதனை அடிப்படை சம்பளத்துடன் இணைத்து வழங்கக் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-5**

தொழிலாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு சர்விஸ் வெயிடேஜ் தொகையை நிர்ணயித்து அதனை அடிப்படை சம்பளத்துடன் சேர்த்து வழங்கக் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-12**

மாதந்தோறும் அனுமதிக்கப்பட்ட விடுப்பினை தவிர்த்து விடுப்பில்லாமல் பணிக்கு வரும் தொழிலாளர்களுக்கு அட்டென்டன்ஸ் போனஸாக ரூ. 1000/— வழங்கக்கோரும் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-14**

தொழிலாளர்களுக்கு குழந்தைகள் படிப்புக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.5000/— ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-15**

தொழிலாளர்களுக்கு சுற்றுலா அலவன்ஸ் (LTA) ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் ரூ.10,000/— வழங்குமாறு கோருவது நியாயமானதுதானா? ஆமெனில் தகுந்த உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-16**

சிறந்த தொழிலாளிக்கு வழங்கும் பரிசுத்தொகையை ரூ. 10000/— ஆக உயர்த்தி தர கோருவது நியாயமானதுதானா? ஆமெனில் தகுந்த உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-17**

அதிக மதிப்பெண் பெறும் தொழிலாளியின் குழந்தைக்கு வழங்கும் பரிசுத்தொகையை ரூ.5,000/— ஆக உயர்த்தி வழங்க கோருவது நியாயமானதுதானா? ஆமெனில் தகுந்த உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-26**

தொழிலாளர்களுக்கு 2 ஷூ மற்றும் 2 செட் சாக்ஸ் ஆண்டுதோறும் வழங்ககோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-27**

தொழிலாளர்களுக்கு ரெயின்கோட் வழங்கக்கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-29**

இரவு ஷிப்ட் மற்றும் பிரேக் ஷிப்ட்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ. 100 ஷிப்ட் அலவன்சாக கோருவது நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-33**

தொழிலாளியின் திருமணத்தின் போது அன்பளிப்பாக ரூ. 10,000/–ம் அவரது குடும்ப உறுப்பினர் திருமணத்திற்கு அன்பளிப்பாக ரூ. 5,000 வழங்க வேண்டும் எனறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-37**

தீபாவளி பண்டிகைக்கு பரிசு பொருள் தராமல் ரூ.1500–க்கு பரிசு கூப்பன் வழங்கக் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை-42**

“நள்ளிரவு பணி முடிக்கும் தொழிலாளர்கள் வீடு திரும்பி செல்ல சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் வரை வாகன வசதி ஏற்பாடு செய்து தர கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை-46**

ஊதிய உயர்வு உள்ளிட்ட பணப்பயன்களை எந்த தேதி முதல் கணக்கிட்டு வழங்க வேண்டும் என்பதை நிர்ணயம் செய்யவும்.

## Disputes between Workmen and Managements referred to Industrial Tribunal for Adjudication.

**எம்.ஆர்.எப் லிமிடெட், சென்னை**

*[அரசாணை (டி) எண் 108, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ–2)த் துறை, 21 மார்ச் 2014, பங்குனி 7, விஜய, திருவள்ளுவர் ஆண்டு–2045.]*

No. II(2)/LE/300/2014.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, எம்.ஆர்.எப் லிமிடெட், சென்னை என்ற நிர்வாகத்திற்கும், எம்.ஆர்.எப் தொழிலாளர் சங்கத்துக்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1) (c) பிரிவிலும், 10(1) (d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிற் தீர்ப்பாயத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண்–1**

தற்போது கணக்கிடப்படும் மணிக்கணக்கு ஊதிய முறையை மாற்றி மாத ஊதியமாக கணக்கிட்டு வழங்கப்படவேண்டும் என்றும், மணிக்கணக்கு தொழிலாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தினை உயர்த்தி ரூ.9,087/– மாத ஊதியமாக நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை எண்–2**

தற்போது நடைமுறையில் உள்ள 12(3) ஒப்பந்தம் முடிவடையும் தேதியான 06–07–2013–க்கு மறுநாள் 07–07–2013 முதல் புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் அமலுக்கு வரவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை எண்–4**

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய உயர்வாக மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/– வழங்கவேண்டும் எனற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்–5**

தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மொத்த ஊதியத்தில் 40% அடிப்படை சம்பளமாக இருக்க வேண்டும் என்றும், வருடாந்திர அடிப்படை சம்பள ஊதிய உயர்வு வருடத்திற்கு ரூ.100 என்றும், இந்த உயர்வு 25 ஆண்டுகள் வரை என்பதை மாற்றி, ஓய்வு பெறும் காலம் வரை வழங்கக்கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை எண்–6**

1. தொழிலாளர்களுக்கு தற்போதுள்ள சர்வீஸ் வெயிட்டேஜ் முறையில் மாற்றம் செய்து 3 வருடங்களுக்கு ஒரு முறை ஸ்லாப் மாறும் வகையிலும், ஸ்லாப் முடிந்த அந்த மாதத்தில் இருந்தே அடுத்த ஸ்லாப் தொகை கிடைக்கும் வகையிலும் மாற்றம் செய்யவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

2. தொழிலாளர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜாக தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ.1585/–ஐ உயர்த்தி ரூ.3,585/–ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

3. தொழிலாளர்களுக்கு சர்வீஸ் பெனிப்பிட்டாக தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ.450/–ஐ உயர்த்தி ரூ.1000/–ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்–7**

1. 20 ஆண்டுகள் பணி முடித்த உற்பத்தி மற்றும் பொறியியல் துறை தொழிலாளர்களுக்கு அவர்கள் திறமைக்கேற்ப பதவி உயர்வு வழங்கப்படவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

2. ஒவ்வொரு துறையிலும் உள்ள மூத்த தொழிலாளர்களை சூப்பர்வைசர்களுக்கு மாற்றாக லீடிங்ஹேண்ட் ஆக நியமிக்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—8**

தொழிலாளர்களுக்கு விடுபட்ட 1400 புள்ளிகளையும் சேர்த்து புள்ளி ஒன்றுக்கு 75 பைசா வீதம் பஞ்சப்படி கணக்கிட்டு வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—9**

தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊக்க ஊதியத் தொகை நேரடியாக சம்பளத்துடன் இணைக்கப்படவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—10**

தொழிலாளர்களுக்கு கல்விப்படியாக தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ. 5,000/—ஐ உயர்த்தி ரூ. 30,000/— ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—11**

தொழிலாளர்களுக்கு ஓய்வுகால நிதியாக தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ. 150/—ஐ உயர்த்தி ரூ. 200/— ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—12**

**1.** தொழிலாளர்களுக்கு சமூக நலநிதியாக தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ. 30/—ஐ உயர்த்தி ரூ. 60/— வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**2.** தொழிலாளர்களுக்கு மனமகிழ்மன்ற நிதியாக தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ. 20/—ஐ உயர்த்தி ரூ. 100/— ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—14**

தொழிலாளர்களுக்கு இன்சூரன்ஸ் தொகையாக தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ. 291/—ஐ உயர்த்தி ரூ. 600/— ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—16**

தொழிலாளர்களுக்கு தொழிற்கூட முன்னேற்ற ஊக்க ஊதியத்தினை உயர்த்தி வருடத்திற்கு ரூ. 8000/— ஆக வழங்கவேண்டும் என்றும், CMD அவார்டு தொகை கணக்கிடும் முறை மேம்படுத்தப்பட்டு ஒப்பந்தமாக்கப்பட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—17**

தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பண்டிகை கால முன்பணம் அனைத்து படிகளுடன் சேர்த்து முழு ஊதிய தொகையாக வழங்கி அதனை 10 மாத தவணைகளில் பிடித்தம் செய்யப்படவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—18**

**1.** தொழிலாளர்களுக்கு விடுப்பு பயண படியாக இரண்டு வருடத்திற்கு ஒருமுறை தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ. 4,400/—ஐ உயர்த்தி இரண்டு வருடத்திற்கு ஒருமுறை ரூ. 20,000/— ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**2.** தொழிலாளர்களுக்கு போக்குவரத்துப்படியாக மாதமொன்றிற்கு தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ. 175/—ஐ உயர்த்தி மாதம் ரூ. 1000/— ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**3.** தொழிலாளர்களுக்கு வீட்டுவாடகைப் படியாக மாதமொன்றிற்கு தற்போது வழங்கப்பட்டுவரும் ரூ. 2,025/—ஐ உயர்த்தி ரூ. 8,000/— ஆக வழங்கவேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—21**

தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் வருகை பதிவு ஊக்குவிப்பு சம்பளத்திற்கு பதிலாக 25 கிலோ முதல் தர அரிசியும், 7 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெயும் வழங்கப்படவேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—23**

தொழிலாளர்களுக்கு சோப், தேங்காய் எண்ணெய் மற்றும் ஊட்டச்சத்து பானம் ஆகியவை வழங்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை எண்—24**

**(i) திருமணக் கடன்**

தொழிலாளர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்தை திருமண கடனாக அளித்து அதனை 60 மாத தவணைகளில் பிடித்தம் செய்யவேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**(ii) வெள்ளி தட்டு விருது**

தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கிவரும் வெள்ளி தட்டு விருது, தங்க விருதுக்கான கால அளவை மாற்றி 15 வருடம் பணி முடித்தோருக்கு வெள்ளி தட்டு விருதும், 25 வருடம் பணி முடித்தோருக்கு தங்க விருதும், 30 வருட பணி முடித்தோருக்கு பிளாட்டினம் விருதும் வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்—29**

**EDLI** திட்டம் மாற்றி அமைக்க கோருவது மற்றும் இறப்பு நிவாரணமாக ரூ. 100/— மாதந்தோறும் வழங்ககோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை எண்—30**

வருடந்தோறும் வழங்கப்படும் சைக்கிள் டயருக்கு பதிலாக மோட்டார் சைக்கிள் டயர் வழங்கப்படவேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PUBLIC (S.C) DEPARTMENT

**Declaration of the Premises of M/s. Indian Oil Corporation Limited, Repeater-*cum*-Cathodic Protection Station located at Vengal, Athangikavanur and Punnapakkam Village, Uthukottai Taluk, Tiruvallur District under the Official Secrets Act.**

*[G.O. Ms No. 209, Public (S.C.), 17th March 2014]*

No. II(2)/PUSC/301/2014.—Whereas, in the opinion of the Government of Tamil Nadu, it is necessary to declare the premises of M/s. Indian Oil Corporation Limited, Repeater-*cum*-Cathodic Protection Station, located at Vengal, Athangikavanur and Punnapakkam Villages, Uthukottai Taluk, Tiruvallur District to the extent of 0.15.0 hectares situated in Survey Nos. 235/1B and 6/2B as specified in the Schedule below as a "prohibited place" under sub-clause (d) of clause (8) of Section 2 of the Official Secrets Act, 1923 (Central Act XIX of 1923) on the ground that information with respect thereto, or the destruction or obstruction thereof, or interference therewith, would be useful to an enemy;

And whereas in pursuance of clause (1) of Article 258 of the Constitution of India, the Government of India, Ministry of Home Affairs, have in their Notification No. S.O. 1285, dated the 4th May 1963, published in the *Gazette of India*, dated the 11th May 1963, entrusted to the Government of Tamil Nadu, the functions of the Central Government in relation to any matter specified in sub-clauses (c) and (d) of clause (8) of Section 2 of the Official Secrets Act, 1923 (Central Act XIX of 1923);

Now, Therefore, in exercise of the powers conferred by sub-clause (d) of clause (8) of Section 2 of the Official Secrets Act, 1923 (Central Act XIX of 1923), the Governor of Tamil Nadu hereby declares, with effect on and from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette*, the premises of M/s. Indian Oil Corporation Limited, Repeater-*cum*-Cathodic Protection Station at Vengal, Athangikavanur and Punnapakkam Villages, Uthukottai Taluk, Tiruvallur District, to the extent of 0.15.0 hectares, situated in Survey Nos. 235/1B and 6/2B as specified in the Schedule below, to be a "prohibited place" for the purposes of the said Act:—

THE SCHEDULE

**The Premises of M/s. Indian Oil Corporation Limited, Repeater-*cum*-Cathodic Protection Station, Vengal, Athangikavanur and Punnapakkam Villages, Uthukottai Taluk, Tiruvallur District**

| *Name of the place (1)* | *Area with description (2)* | *Boundary particulars (3)* |
|---|---|---|
| M/s. Indian Oil Corporation Limited, Repeater-*cum*-Cathodic Protection Station, Vengal, Athangikavanur, and Punnapakkam Villages, Uthukottai Taluk, Tiruvallur District | **Name of the Village:** Athangikavanur **Name of Taluk:** Uthukottai **Name of the District:** Tiruvallur **Survey Number:** 235/1B **Total Area:** 0.05.5 hectares | North by S.No. 235/1A South by S.No. 235/1A West by Punnapakkam Village, S.No. 6/2B, owned by Indian Oil Corporation Limited. East by: Athangikavanur-Punnapakkam Highways |
| | **Name of the Village:** Punnapakkam **Name of the Taluk:** Uthukkottai **Name of the District:** Tiruvallur **Survey Number:** 6/2B **Total Area:** 0.09.5 hectares | North by: S.No. 5/2 South by: S.No. 6/2A West by: S.No. 6/2A East by: Athangikavanur Village S.No. 235/1B owned by Indian Oil Corporation Limited. |
| **Total —** | **0.15.0 hectares.** | |

SHEELA BALAKRISHNAN,
*Chief Secretary.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU